செய்தி வெளியீடு: 407 4.7.2007

# செய்திக் குறிப்பு

## ஹெலிகாப்டர் மூலம் தமிழ்நாட்டில் சுற்றுலா

## சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் கலந்தாய்வு

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு ஹெலிகாப்டர் மூலம் சுற்றுலா செல்ல மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. என்.சுரேஷ்ராஜன் அவர்களின் தலைமையில் இன்று (4/7/2007) கலந்தாய்வுக் கூட்டம் சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.

ஹெலிகாப்டர் சுற்றுலாவை மதுரையிலிருந்தும்/ கோயமுத்தூரிலிருந்தும் உதகமண்டலம், இராமேசுவரம், கன்னியாகுமரி, பழனி, கொடைக்கானல் ஆகிய இடங்களுக்கு முதலில் இயக்கலாம் என்று இந்திய அரசு நிறுவனமான "பாவன் ஹன்ஸ்" அலுவலர்கள் இக்கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.மோகன் (மதுரை) அவர்கள், திரு. பெல்லார்மின் (நாகர்கோயில்) அவர்கள் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை செயலாளர் திரு. டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், தகவல் தொழில்நுட்பத் துறை செயலாளர் திரு. சி.சந்திர மௌலி, இ.ஆ.ப., பொதுத்துறை கூடுதல் செயலர் திரு. குமார்ஜெயின்த், இ.ஆ.ப., அவர்கள், சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் முனைவர் எம். இராஜாராம் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சுற்றுலாத்துறை அலுவலர்களும் பங்கேற்றனர்.

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை சென்னை.